**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 - 2023**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 இன் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூன் 28 ஆம் திகதிய 2947-எஸ்ஆர்ஜ மற்றும் 2948-எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் மற்றும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் - 01 இன் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் - 01 இன் செயற்திட்ட கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் - 01 இன் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் வசிப்பவர்களிற்கான நகர சூழல் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் - 01 இன் குறிக்கோள்களாக உள்ளதுடன் (அ) கொழும்பு நகரத்தில் நீர் வழங்கல் முறைமையை புனரமைத்து விரிவாக்குதல் மற்றும் வருமானமற்ற நீரைக் குறைத்தல், (ஆ) கொழும்பு பெரும்பாக பகுதியில் கழிவு நீர் அகற்றல் சேவையை முன்னேற்றுதல், (இ) சேவை வழங்குநர்களின் நிறுவனரீதியான கட்டமைப்பு மற்றும் இயலளவை வலுப்படுத்தல் மற்றும் (ஈ) முதலீட்டு செயற்திட்டங்களை முகாமை செய்து அமுல்ப்படுத்துதல் என்பன எதிர்பார்க்கப்பட்டது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் - 01 இன் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,784 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 112 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 11,088 மில்லியன் அல்லது 75 சதவீதத்திற்கு சமமான ஐ.அ.டொலர் 84 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 3,696 மில்லியன் அல்லது 25 சதவீதத்திற்கு சமமான ஐ.அ.டொலர் 28 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் - 01 அதன் நடவடிக்கைகளை 2013 செப்தெம்பர் 25 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர் நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் - 01 இன் காலப்பகுதி 2021 யூன் 30 வரை மூன்று தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 01 இன் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 1 இன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2022 மே 23 இல் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் கணிசமான அளவு நிறைவடைந்த போதிலும், கடனின் ரூபா 231.73 மில்லியன் தொகையான கடன்பெறுதல் கிரயம் NWSDB இன் இலாபம் மற்றும் நட்டக் கணக்கில் அறவிடப்படுவதற்குப் பதிலாக மூலதன நடைமுறை வேலை கணக்கில் மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், இலங்கை கணக்கீட்டு நியம இல. 23 (23) இற்கு இணங்க குறித்துரைக்கப்பட்ட பயன்பாட்டிற்கு வரும்போது கடன் பெறுதல் கிரயத்தின் மூலதனமயமாக்கலை நிறுத்துவதற்கு சபை நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | 231.73 | வழக்கமாக, செயற்திட்டத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் கடன் வட்டி அறவிடப்படுகிறது. பகுதி 01 ஏற்கனவே மூடப்பட்டுள்ளதால் 2024/04/24 ஆம் திகதிய கடிதம் மூலம் 2023 ஆம் ஆண்டில் வட்டியை அறவிட வேண்டாம் என்று செயற்திட்டம் தெரிவித்துள்ளது. | பிழையை சீர்செய்து எதிர்காலத்தில் சரியான கணக்கு நடைமுறைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இச் செயற்திட்டத்தின் மூலம் ரூபா 133 மில்லியன் பெறுமதியான வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு சபையிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், அந்த வாகனங்களின் பெறுமதி பேரேட்டிற்கு ரூபா 112 மில்லியனாக எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் NWSDB இற்கு ஒப்படைக்கப்பட்ட | 21.30 | ரூபா 133,217,966 பெறுமதியான வாகனங்கள் செயற்திட்டத்திற்கு பெறப்பட்டுள்ளதுடன் ரூபா 111,909,396 பெறுமதியான வாகனங்கள் தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. ரூபா 21.308 மில்லியன் பெறுமதியான வாகனங்களின் | தவறை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | வாகனங்களின் கணக்கு மீதி ரூபா 21 மில்லியனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன் பதிவு செய்யப்படாத வாகனங்களை இனங்காண்பதற்கு எந்த விபரமும் காணப்படவில்லை. | | மீதி இந்த 2024 ஆம் ஆண்டில் மாற்றப்படும். | |
| (இ) | செயற்திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட 14 Crew கெப் வண்டிகள் மற்றும் 07 டபிள் கெப் வண்டிகள் சபைக்கு மாற்றப்பட்டுள்ளன. எனினும் சபையின் சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் 16 வாகனங்கள் மாத்திரமே பெறப்பட்டுள்ளன. எனவே, ரூபா 28 மில்லியன் பெறுமதியான 5 வாகனங்கள் தொடர்பாக கணக்காய்விற்கு சனைறுகளை வழங்க செயற்திட்ட முகாமைத்துவம் தவறியிருந்தது. | 28.46 | மிகுதி வாகனங்களின் (5 எண்ணிக்கைகள்) விபரங்கள் உடனடியாக வழங்கப்படும். | பதிவு செய்யப்படாத ஐந்து வாகனங்கள் தொடர்பான போதிய தகவல்களை வழங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | NWSDB இற்கு மாற்றப்பட்ட ரூபா 9 மில்லியன் பெறுமதியான வாகனங்கள் வாகனங்களாகப் பதிவு செய்யப்படுவதற்குப் பதிலாக பொருள் மாற்றப்பட்ட கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. | 8.98 | இது சப்ரகமுவ RSC இலிருந்து NWSDB இற்கு மாற்றப்படும்/ தேவையான திருத்தம் உடனடியாக செய்யப்படும். | பிழையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், வற் சிட்டைகள் போன்ற எந்த ஆவண ஆதாரமும் இல்லாமல் NWSDB கணக்கிலிருந்து பெறப்பட்ட நிதிக்கு எதிராக ரூபா 9 மில்லியன் பெறவேண்டிய திரண்ட கோரப்படாத VAT தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மூலதன நடைமுறை வேலை கணக்கு மற்றும் NWSDB இடமிருந்து பெறப்பட்ட நிதி கணக்கு இரண்டும் ரூபா 9 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 9.2 | இணங்கப்படுகிறது. மீண்டெழும் செலவின் கீழ் VAT செலவினங்களாக அறிக்கையிடுவதற்கு JV ஐ சீர்செய்வோம். | தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாண இல. 502(2) மற்றும் 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | செயற்திட்ட அலுவலகத்தால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடு உருவாக்கப்பட்டு தற்போது பேணப்படுகிறது. | சுற்றறிக்கையால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிலையான சொத்து பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (ஆ) | 2010 யூலை 26 ஆம் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கை | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது குறித்துக்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கைக்காக உள்ளக கணக்காய்விற்கு தெரிவிக்கப்படுகிறது. | தொடர்ந்து உள்ளக கணக்காய்வுகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 பௌதீக முன்னேற்றம்

முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் கொழும்பு நகரில் வருமானம் அல்லாத நீரை 49 சதவீதத்தில் இருந்து 18 சதவீதம் வரை குறைத்து, 36 மாவட்ட மானியிடல் பகுதிகளில் (DMAs) **469,200** மீற்றர் குழாய் பதிக்கும் பணிகளில் ஈடுபட்டு **62,932** வீடுகளுக்கு இணைப்பு பரிமாற்றங்களை வழங்குதல் மற்றும் கொழும்பு நகரின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியின் நீர் வழங்கல் முறைமையை புனரமைத்து விரிவாக்குதலின் கீழ் NRW ஐக் குறைக்கும் நோக்கத்துடன் இந்த செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 100 சதவீதமாக இருந்த போதிலும் இந்த அறிக்கையின் 4.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அடைந்துகொள்ளப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு நகரின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் வருமானம் அல்லாத நீரின் சதவீதத்தை 49 சதவீதத்தில் இருந்து 18 இற்கு கீழ் குறைக்கும் இலக்கை அடைந்துகொள்வதற்காக NRW முகாமைத்துவத்தை செயற்படுத்தவும், இலக்கின் முன்னேற்றத்தைக் | ஓட்ட மானிகள் உற்பத்தியாளரிடமிருந்து விற்பனைக்குப் பிந்தைய சேவையைப் பெறுவதற்கான செயன்முறையில் செயற்திட்டம் உள்ளது. தேவையான பட்டரிகள் இறக்குமதி செய்யப்பட்டு மாற்றாகப் | இந்தக் கூறின் தோல்விகளுக்கு முகாமைத்துவம் பொறுப்பேற்க வேண்டியதுடன் ஏற்கனவே உள்ள சிக்கல்களை சீர்செய்து எதிர்பார்த்த முடிவுகளைப் |

| | | | |
|---|---|---|---|
| | காண்பதற்கும் ஓட்ட அளவீடுகளின் தரவைப் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 115 மில்லியன் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 383,710.2 பெறுமதியில் 36 DMA மானிகள் நிறுவப்பட்டன. எனினும், டிஸ்சார்ஜ் பட்டரிகள் மற்றும் குறைபாடுள்ள தரவு பதிவேடுகள் காரணமாக மேலே உள்ள 36 இல் 31 DMA மானிகள் செயலற்ற நிலையில் இருந்தன. மேலும் 2022 முதல் சில மானிகள் செயலிழந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | பயன்படுத்தப்படுகின்றன. மேலும் NWSDB கொழும்பு நகரத்திற்காக நிறுவப்பட்ட ஓட்ட அளவீட்டு முறையை அவ்வப்போது பராமரிப்பதற்காக உள்ளூர் முகவருடன் பராமரிப்பு உடன்படிக்கையில் கையெழுத்திடுகிறது. | பெற்றுக்கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அந்த DMA மானிகள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 3 வருட உற்பத்தி உத்தரவாதத்துடன் கொள்வனவு செய்யப்பட்டு, கொள்வனவு திகதியிலிருந்து இரண்டு வருடங்கள் கழித்து நிறுவப்பட்டது. மேலும் நிறுவப்பட்ட நேரத்திலும் 36 மானிகளில் 31 இன் உத்தரவாதக் காலப்பகுதி காலாவதியாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், அந்த குறைபாடுள்ள மானிகளை சீர்செய்வதற்கும், அந்த மானிகளை பராமரிப்பதற்கும், ஓட்ட மானிகளை நிறுவும் செயன்முறை மிகவும் தாமதமாகிவிட்டதால் வழங்குநரின் உத்தரவாதக் காலப்பகுதியை நீடிப்பதற்கும் உற்பத்தியாளர் அங்கீகரித்த உள்ளூர் முகவருடன் உடன்படிக்கையொன்றை ஏற்படுத்துவதற்கும் செயற்திட்ட முகாமைத்துவம் இன்னும் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | பொருந்தக்கூடிய தன்மையை உறுதிப்படுத்துவதற்காக ஓட்ட மானிகள் ஒரு தனி வியாபாரக்குறியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டன. மேலும் அசல் செயற்திட்டத் திட்டத்தின் பிரகாரம் 2018 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், குழாய் பதிக்கும் போது பிரதான ஒப்பந்ததாரர் எதிர்கொள்ளும் பல்வேறு தள சிக்கல்கள் காரணமாக, DMA உருவாக்கம் எதிர்பார்த்ததை விட அதிக நேரம் எடுத்தது. இதனால், நிறுவுவதில் தாமதம் ஏற்பட்டது. | பட்டியலிடப்பட்ட கால எல்லைக்குள் கொடுக்கப்பட்ட பணியை பூர்த்தி செய்வதற்கு செயற்திட்ட முகாமைத்துவம் பொறுப்பேற்க வேண்டும். |

**3.3 தீர்வு காணப்படாத முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 11 மில்லியன் தொகையான இரத்மலானையில் பிரதான களஞ்சியங்களில் நீர் மானி பரிசோதனை பணிமனை கட்டிடம் 2014 ஆம் ஆண்டில் ரூபா 2 மில்லியன் முற்பணக் கொடுப்பனவுடன் தனியார் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 2024 ஏப்ரல் அளவில் 10 வருடங்கள் கடந்தும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தம் தொடர்பான எந்த | சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக NWSDB ஆல் சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிதி இழப்பை ஒப்பந்ததாரர் அல்லது பொறுப்பான அதிகாரிகளிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வேலையையும் செய்திருக்கவில்லை. மேலும் முகாமைத்துவம் முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதத்தின் காலப்பகுதியை நீடிப்பதற்கு அல்லது அந்த உத்தரவாதங்களை பணமாக்குவதற்கு எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

**3.4 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | செயற்திட்டம் பௌதீக ரீதியாக பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தத்தின் இறுதி விலைப்பட்டியல்கள் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், ரூபா 16,452 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பான சொத்து மூலதனமாக்கல் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிடம் முறையாக கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | Pkg 1 & 2 இறுதி விலைப்பட்டியல்கள் பூர்த்தியடைந்ததால், இந்த மொத்தத் தொகை சொத்துப் படிவங்கள் மூலம் மூலதனமாக்கலில் சேர்க்கப்படும். | சொத்து மூலதனமாக்கல் செயன்முறையை விரைவுபடுத்துவதற்கும், மேலதிக தாமதமின்றி செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | குழாய் பதிக்கப்பட்ட அனைத்து வீதிகளையும் கொழும்பு மாநகர சபையிடம் ஒப்படைத்து இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும் இச் செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பாக ரூபா 109 மில்லியன் தொகையான பிணை வைப்புக்களில் ரூபா 109 மில்லியனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்படைக்கப்பட்ட வீதிகளுக்கான பிணை வைப்புக்களை விடுவிக்குமாறு CMC இடம் ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | மேலதிக காலதாமதமின்றி பிணை வைப்பை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |